# தமிழ் சமுதாயத்தில் பாடசாலை உள ஆற்றுப்படுத்தல் எதிர்கொள்ளும் சவால்கள்- ஓர் ஆய்வு-(வவுனியா மாவட்டத்தின் தமிழ்ப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டது.)

# (CHALLENGES OF SCHOOL COUNSELLING IN TAMILIAN SOCIETY (A STUDY BASED ON TAMIL SCHOOLS OF VAVUNIYA DISTRICT)

**வி.மேகலா இ.சுகிர்தா கலாநிதி.க.கஜவிந்தன்**

நான்காம் வருடம், உளவியல் சிறப்புக்கலை, மெய்யியல் உளவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

சிரேஸ்ட விரிவுரையாளர், மெய்யியல் உளவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

meguvikki555@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்.**

*தமிழ் பேசுகின்ற மக்கள் வாழ்கின்றதும், பாரம்பரியமாகப் பின்பற்றப்படுகின்ற தமிழ் கலாசார பாரம்பரியங்களுக்கு ஏற்ப தமது வாழ்க்கைக் கோலங்களைக் கொண்டுள்ள மக்கள் வாழ்கின்றதுமான பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசங்களை தமிழ் சமுதாயங்கள் எனலாம். எமது நாட்டைப் பொறுத்தளவில் தமிழ் சமுதாயம் எனும் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கப்படுகின்றன. தமிழர் பாரம்பரியங்களை நோக்கின் தொன்று தொட்டு சடங்காசாரங்கள் மற்றும் விழாக்களை அனுஸ்டிப்பதன் மூலம் உளவளத்துணை செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளனர். இது உளவளத்துணை எனும் நேரடிப் பதமாகக் குறிப்பிடப்படாவிட்டாலும், சீர்மியம், சீர்மிய உளவியல், வழிகாட்டலும் ஆலோசனையும், அறிவுரை பகர்தல் போன்றவாறான சொல்லாடல்களினூடாக பெரிதும் பேசப்பட்டுள்ளது.*

*அவ் வகையில் உளவளத்துணை என்பது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்கின்ற மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வதில் சிரமப்படுகின்றவர்களுக்கு தகுதியான ஒருவரால் வழங்கப்படும் ஆலோசனை வழிகாட்டல் செயன்முறை ஆகும். அதாவது துணைநாடுனர் தன்னுள் மறைந்து கிடக்கும் நற்பண்புகள், மனப்பாங்குகள், திறமைகள் என்பவற்றை அடையாளம் கண்டு விருத்தி செய்யவும், சாதகமான புறச் சூழல்களை அடையாளம் கண்டு கொள்வதன் மூலம் ஆளுமையில் வளர்ச்சி காணவும்,, சமூகத்தினது தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பிரச்சினைகளைத் தீர்க்கவும், வளர்ச்சி தராதவற்றைக் கைவிடவும் உதவுதலே உளவளத்துணை செயற்பாடு எனலாம்.*

*இத்தகைய உளவளத்துணையானது இன்று சகல துறைகளிலும் முக்கியம் பெற்று வரும் வேளையில் அண்மைக்காலங்களில் பாடசாலைகளில் இதன் அவசியமும் தேவையும் சற்று அதிகமாகவே உணரப்பட்டுள்ளது என்பதனை கண்கூடாக காண முடிகின்றது. பாடசாலை உளவளத்துணை என்பது பாடசாலைகளின் விரிவான பாடத்திட்டத்தின் அல்லது இலக்கிற்குள் ஒருங்கிணைந்த கூறாக காணப்படுகின்றது. இது மாணவர்களின் கல்வி, தொழில் மற்றும் தனியாள், சமூக விருத்திகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் அனைத்து மாணவர்களுக்குமான கற்றல் செயன்முறையை ஊக்குவிப்பதற்குமான திட்டங்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்ற செயன்முறை என* ***American school counselling Association*** *குறிப்பிடுகின்றது. இன்ற இலங்கையின் கல்வித் திட்டங்களக்கு அமைவாக ஒவ்வொரு பாடசாலைகளிலும் வழிகாட்டலும் ஆலோசனையம் எனும் பிரிவில் உளவளத்துணை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் மாணவர்களின் உளநலத்தினை பாராமரிப்பதில் வழிகாட்டுபவர்களாக காணப்படுகின்றனர். அண்மைக் காலங்களில் பாடசாலை உளவளத்துணையாளர்களின் நியமனம் அதிகமாக இடம்பெற்று வருகின்ற நிலையிலே இவர்கள் அதிகமான சவால்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.*

*இவ்வாய்வானது வவுனியா மாவட்டத்தின் பாடசாலை உளவளத்துணையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை ஆராயும் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காகான முதலாம்நிலைத் தரவு சேகரிப்பிற்காக நேர்காணல் பயன்படுத்தப்பட்டது. இரண்டாம் நிலைத் தரவுகளும் பெற்றுக் கொள்ளப்பட்டு விபரணப் பகுப்பாய்வின் மூலம் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.*

**திறவுச் சொற்கள்-** தமிழ் சமுதாயம், பாடசாலை உளவளத்துணை, சவால்கள்

## 1. அறிமுகம்

உளவியல் எனப்படுவது மனித நடத்தைகளை ஆராயும் ஓர் துறையாகக் காணப்படுகின்றது. இது மனித நடத்தை மற்றும் உளச் செயன்முறைகள் பற்றியதுமான விஞ்ஞானக் கற்கை ஆகும். இத்தகைய உளவியலானது பல்வேறுபட்ட துறைகளை தன்னுள் உள்ளடக்கியுள்ளது. அத்தகைய துறைகளுள் முதன்மையானதும் முக்கியமானதுமான துறையாக உளவளத்துணை விளங்குகின்றது. ஒருவருக்கு ஏற்படும் உளவியல் சார்ந்த சிக்கல்களை தகுந்த முறையில் அணுகுவதையும் கையாளுவதையும் அதற்கான தீர்வினை நோக்கி வழிப்படுத்தலையுமே உளவளத்துணை என்கின்றோம். மனிதர்கள் வாழ்க்கையில் சிறந்த உளநலத்தையும் பொருத்தப்பாட்டினையும் அடைவதற்கு உளவளத்துணை அவசியமானதாகும். இத்தகைய உளவளத்துணையானது இன்று சகல துறைகளிலும் முக்கியம் பெற்று வரும் வேளையில் அண்மைக்காலங்களில் பாடசாலைகளில் உளவளத்துணை சேவைகள் அதிகம் தேவைப்படும் ஒன்றாக காணப்படுகின்றது. அதுவும் தமிழ் சமுதாயங்களில் மாணவர்களுக்கு மிகவும் அத்தியவசியமான தேவையாக பாடசாலை உள ஆற்றுப்படுத்தல் மாறியுள்ளது. தற்காலத்தில் இப் பாடசாலை உள ஆற்றுப்படுத்தலானது ஆலோசனையும் வழிகாட்டலும் என்ற பெயரில் வழங்கப்படுகின்றது.

புராதன காலம் தொட்டு இன்று வரையில் வழிகாட்டலும் ஆலோசனையும் பல்வேறு பரிணாமங்களை பெற்று வளர்ந்து வருகின்றது. ஆரம்ப காலத்தில் எமது தமிழ் சமுதாயங்களில் குடும்பம் சமூகம் என்ற அடிப்படையில் மதம் பற்றிய நம்பிக்கைகள், மூத்தோர் வழிகாட்டல்கள், சமய பழக்கவழக்கங்கள் எனபன உளவள ஆலோசனையை வழங்கும் அம்சங்களாக காணப்பட்டன. பின்னர் கால மாற்றங்களுக்கு ஏற்ப உளவியல் கோட்பாடுகளை உள்வாங்கி விரிவான ஓர் விஞ்ஞான செயன்முறையாக மாறியது.

இங்கு வழிகாட்டலும் ஆலோசனையும் எனக் குறிப்பிடப்படுவது மாணவர்கள் தமது வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் சூழலுடன் இயைபாக்கமடைந்து சுயதிறன்களில் விருத்தி பெற வைக்கவும், தமது பிரச்சினைகளுக்கான தீர்மானங்களை எடுப்பதற்கும் உதவுகின்ற உளவியல் ரீதியான செயன்முறை ஆகும். மேலும் பாடசாலை உள ஆற்றுப்படுத்தல் என்றால் என்ன என நோக்கினால் இது தொடர்பாக பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களை நாம் நோக்க முடியும்.

## American school counselling association

பாடசாலை உளவளத்துணை என்பது பாடசாலைகளின் விரிவான பாடத்திட்டத்தின் அல்லது இலக்கிற்குள் ஒருங்கிணைந்த கூறாக காணப்படுகின்றது. இது மாணவர்களின் கல்வி, தொழில் மற்றும் தனியாள், சமூக விருத்திகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் அனைத்து மாணவர்களுக்குமான கற்றல் செயன்முறையை ஊக்குவிப்பதற்குமான திட்டங்களைக் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

### ☞ விக்ரமரத்ன-1998-2010

இவர் மேற்கொண்ட ஆய்வில் இலங்கை மாணவர்கள் பாடசாலை உள ஆற்றுப்படுத்தலை எதிர்காலத்தில் சிறப்பான தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கான வழிகாட்டியாகவும் கல்விக் குறிக்கோள்களை அடைவதற்கான வழிகாட்டியாகவும் கருதுகின்றனர் என்றார்.

### ☞ Brewer

பாடசாலை உள ஆற்றப்படுத்தல் என்பது ஓர் செயன்முறையாகும். மாணவர்கள் தமது திறன்களை இனங்கண்டு அவற்றினை முகாமை செய்து அவற்றினூடாக எதிர்கால இலக்குகளுக்கு ஏற்ற பாதையை வழிவகுத்துக் கொடுக்க உதவும் செயன்முறை இதுவாகும்.

### ☞ Hamrin and Erikson

பாடசாலையின் உள ஆற்றுப்படுத்தல் என்பது கல்வித் திட்டத்தின் ஒரு பிரிவாகும். இது குறிப்பாக மாணவர்களை நிகழ்கால சூழ்நிலைக்கு பொருத்தமுடையவர்களாக உருவாக்கி அவர்கள் தமது விருப்பங்கள், திறன்கள் மற்றும் சமூகத் தேவைகளுக்கு அமைவாக தம்முடைய எதிர்காலத்தை திட்டமிடவும் உதவும் வழிகாட்டல்கள் ஆகும்.

### ☞ Sandhu-2000

பாடசாலை உள ஆற்றுப்படுத்தலானது மாணவர்களுக்கு பாதுகாப்பான கற்றல், சூழலை உருவாக்கி பாடசாலை சமூகத்தின் உரிமைகளை மீட்டெடுக்க உதவுகின்றது.

### ☞ Bridgeland and Bruce 2011

மாணவர்கள் தமது இலக்குகள், ஆசைகள் போன்றவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவி புரிகின்ற செயன்முறை பாடசாலை உள ஆற்றுப்படுத்தல் ஆகும்.

ஆகவே பாடசாலை உளவளத்துணை என்பது மாணவர்களது முழுமையான விருத்தியை நோக்கி பயணிக்கின்ற உளவியல் செயன்முறையாக காணப்படுகின்றது. இது மாணவர்களுக்கு உளத் திறன்களையும் சமூகத் திறன்களையும் மேம்படுத்துவதற்கு உதவி புரிகின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இதுவரை ஒரு தோல்வியுற்ற சமுகம் எனும் மனப்பாங்கையே கொண்டிருக்கின்றனர். தோல்வியுற்ற மக்கள், தோல்வியுற்ற அரசு, தோல்வியுற்ற சமுதாயம் என்ற உணர்வுகள் இழையோடப்பட்ட நிலையிலேயே இன்றைய தமிழ் சமுதாயம் காணப்படுகின்றது. மூன்று தசாப்த காலமாக இடம்பெற்று வந்த யுத்தம், சுனாமி பேரழிவு,இனவாத அடக்குமுறைகள், கலாச்சார, விழுமிய சீரழிவுகள், அரசியல் அடக்குமுறைகள், போதை மது பாவனைக் கலாச்சாரம், சமூகவலைத்தளங்களின் தாக்கங்கள், வன்முறை நடத்தைகள், பாலியல் துஸ்பிரயோகங்கள் என தொடர் தோல்விகளையே தமிழ் சமுதாயம் சந்தித்து வருகின்றது.

இத்தகைய சமுதாயத்தில் தான் எமது எதிர்கால சந்ததியினராகிய மாணவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இவர்களை எதிர்காலத்தில் நற் பிரஜைகளாக உருவாக்கும் கடப்பாடு அதிகம் பாடசாலையே சாருகின்றது. பாடசாலைகளானது பிள்ளைகளின் உடல், உளம், சிந்தனை என்ற எல்லாக் கூறுகளிலும் முழுமையான ஆளுமை விருத்தியை ஏற்படுத்துமாறு சிறப்பான கல்வியை வழங்க வேண்டும்.

ஆரம்பத்தில் சமுகத்தின் அடிப்படை அலகான குடும்பத்திலிருந்து பிள்ளை பாடசாலை என்னும் அடுத்த அலகிற்குள் அடியெடுத்து வைக்கின்றது. இத்தகைய பாடசாலையானது பிள்ளைகளுக்கு அறிவையும், நல்லொழுக்கத்தையும் போதிக்கும் இடங்களாக திகழ வேண்டும். பிள்ளை தனது அதிக நேரத்தை பாடசாலையிலேயே செலவழிக்கின்றது. இதனால் ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கான சிறந்த வழிகாட்டிகளாக காணப்பட வேண்டும். ஆனால் தற்காலத்தில் அவ்வாறில்லாமல் பிள்ளைகள் வாழ்வதற்குரிய சிறந்த ஒழுக்கம், வேண்டிய அறிவு, செயற்திறன் மற்றும் மனப்பாங்குகள் கொண்ட மாணவர்களை உருவாக்குவதற்கு எமது கல்வித் துறை தவறிவிட்டது என்றே கூறலாம். தற்கால பாடசாலைச் சூழலானது முழுமையான ஆளுமை கொண்ட மாணவர்களை உருவாக்க முடியாமல் காணப்படுகின்றது காரணம் உலகளாவிய ரீதியில் இடம்பெற்று வரும் சமூக மாற்றங்களின் தாக்கங்களினை பாடசாலைகள் இயல்பாகவே உள்வாங்கிக் கொள்கின்றன. இதனால் தான் பாடசாலைகளில் ஆலோசனை மற்றும் வழிகாட்டல் சேவை உள்ளீர்க்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.

இலங்கையின் கல்வி சேவையில் 1970ம் ஆண்டு முதல் பாடசாலைகளில் வழிகாட்டலும் ஆலோசனையம் அறிமுகப்படுத்தப்பட்டு இன்று வரை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் பின்னர் 1981ம் ஆண்டு கல்வி வெள்ளையறிக்கையில் ஆலோசனையும்

வழிகாட்டலும் பிரிவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இலங்கையின் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கல்வி சீர்திருத்தங்களுக்கு அமைவாக சகல பாடசாலைகளிலும் வழிகாட்டலும் ஆலோசனையும் எனும் பிரிவிற்குள் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

இன்று பாடசாலைகளில் ஆலோசனையை வழங்கக் கூடிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்திருக்கின்றது. ஒரு தோல்வியுற்ற தமிழ் சமுதாயத்திலிருக்கும் மாணவர்களது மனப்பாங்குகளை மாற்றி அவர்களை எதிர்கால வெற்றியை நோக்கி வழிகாட்ட வேண்டிய கடப்பாடு உள்ளது. ஒவ்வொரு ஆசிரியர்களும் மாணவர்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்வதுடன் மட்டுமல்லாமல் சிறந்த உளவளத்துணையாளர்களாகவும் தமது வகிபங்கினை எடுத்துக்கொள்ள வேண்டும். சிறந்த கல்வியினூடாக மாணவர்களிடையே நடத்தை மாற்றத்தை கொண்டுவர முயல வேண்டும்.

இன்று தமிழ் சமுதாயத்தில் மாணவர்கள் பல்வேறான பிரச்சினைகளுக்கு உள்ளாகுவதனை அவதானிக்க முடியும். யுத்தத்தின் விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு சமூகமாகவே தமிழ் சமூகத்தில் மாணவர்கள் காணப்படுகின்றது. இன்று கட்டிளமைப் பருவத்தினரிடையே தற்கொலை, வன்முறை நடத்தை என்பன அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. இவற்றினை விட சமூக வலைத்தளங்களின் அதிக பாவனையினால் உறவுநிலைக் குழப்பங்கள், பாலியல் சார்ந்த பிரச்சினைகள் எனப் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். **விக்ரமரத்ன(1998)** அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மாணவர்கள் முக்கியமாக பழக்கவழக்கங்களின் குறைபாடு, கட்டிளமைப் பருவ உடலியல் மாற்றப் பிரச்சினைகள், உறவுநிலைக் குழப்பங்கள், கட்டிளமைப் பருவ காதல், நடத்தைக் கோளாறுகள், சமூக திறன்களில் குறைபாடு போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்வதாக கூறினார்.

இதனைவிட பொருளாதார சிக்கல்கள், கலாச்சார மாற்றங்கள், போதைப் பொருள் பாவனைகள், பெற்றோருடனான உறவுநிலைக் குழப்பங்கள், இளவயதுத் திருமணங்கள், பாடசாலைச் சூழலுக்கு பொருந்தாத தன்மை என பல்வேறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இப்பிரச்சினைகளை மாணவர்களிடமிருந்து இப் பிரச்சினைகளினால் மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுதல், இளவயதில் திருமணம் செய்தல், சட்டவிரோத நடத்தைகளில் ஈடுபடுதல், மது போதைப் பாவனையாளர்களாக உருவாகுதல், குடும்ப உறவுகளுடன் பிரச்சினைகளை ஏற்படுத்துதல் போன்ற தாக்கங்களை அனுபவித்து வருகின்றனர். இவற்றிலிருந்து மாணவர்களை வெளிக்கொணர்வதற்கு அவர்களுடைய பிரச்சினைகளை முறையாக இனங்கண்டு அவற்றிற்கான ஆலோசனையை வழங்க வேண்டும். இந்த வகையில் பாடசாலை உள ஆற்றுப்படுத்தல் என்பது மிகவும் முக்கியமானதாக காணப்படுகின்றது.

அவ் வகையில் வடமாகாணத்தில் உளவளத்துணை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் பிரதான மாவட்டங்களுள் ஒன்றாக வவுனியா மாவட்டமும் காணப்படுகின்றது. அவ் வகையில் வவுனியா மாவட்டத்தில் பாடசாலை உள ஆற்றுப்படுத்தலின் தற்கால போக்கு மற்றும் பாடசாலை உளவளத்துணையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாக ஆராய்வதனை நோக்கமாக கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வு முறையியல்

### 2.1. ஆய்வு பிரதேசமும் மாதரி தெரிவும்

ஆய்வானது வட மாகாணத்தின் வவுனியா மாவட்டத்தினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தின் தமிழ் பாடசாலைகளின் பாடசாலை உளவளத்துணை ஆசிரியர்களை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.2. மாதிரி தெரிவு

வவுனியா மாவட்டத்தின் தமிழ் பாடசாலைகளின் பாடசாலை உளவளத்துணையாளர்கள் ஆய்வுக்கான மாதரிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வவுனியா மாவட்டத்தின் பாடசாலைகளின் விபரம் வருமாறு

| வவுனியா தெற்கு கல்வி வலயம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **கோட்டம்** | **1AB Super** | **1AB** | **1C** | **Type2** | **Type3** | **Total** |
| தமிழ்க் கோட்டம் | 03 | 05 | 04 | 15 | 17 | 44 |
| சிங்களக் கோட்டம் | 01 | 02 | 02 | 04 | 15 | 24 |
| செட்டிகுளம் கோட்டம் | 01 | 02 | 03 | 07 | 30 | 43 |
| மொத்தம் | 05 | 09 | 09 | 26 | 62 | 111 |
| **வவுனியா வடக்கு கல்வி வலயம்** | | | | | | |
| நெடுங்கேணி கோட்டம் | 00 | 02 | 03 | 06 | 32 | 43 |
| ஓமந்தை கோட்டம் | 02 | 03 | 04 | 15 | 22 | 46 |
| மொத்தம் | 03 | 05 | 07 | 20 | 54 | 89 |

மூலம்- வவுனியா மாவட்ட கல்வி வலயங்கள்

மேற்கூறப்பட்ட பாடசாலைகளின் அடிப்படையில் மொத்தக் குடித்தொகையில் 15 வீதமான மாதரிகளாக 15 பாடசாலை உளவளத்துணை ஆசிரியர்கள் எழுமாற்றான முறையில் தெரிவு செய்யப்பட்டனர்.

2.3. ஆய்வுப் பிரச்சினை

தமிழ் சமுதாயத்தில் மாணவர்கள் பல்வேறான பிரச்சினைகளுக்கு உட்பட்டுகின்ற நிலையில் மாணவர்களது உளநலனை வழிப்படுத்தும் வழிபாட்டல் துறை சார்ந்த ஆசிரியர்களும் தமது துறைசார்ந்த ரீதியில் பல்வேறான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாய்வின் பிரதான ஆய்வுப் பிரச்சினையாக பாடசாலை உளவளத்துணையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெளிக் கொணர்தல் என்பது காணப்படுகின்றது.

2.4. ஆய்வு நோக்கம்

பொதுவாக ஆய்வானது இரண்டு வகையான நோக்கங்களைக் கொண்டு காணப்படும்.

பொது நோக்கம்

- வவுனியா மாவட்டத்தின் பாடசாலை உளவளத்துணையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணல்

சிறப்பு நோக்கங்கள்

- தமிழ் சமுதாயத்தில் பாடசாலை உளவளத்துணையின் நிலையினை மதிப்பிடல்
- வவுனியா மாவட்டத்தில் பாடசாலை உளவளத்துணையின் நிலையினை அறிதல்

- பாடசாலை உளவளத்துணையாளர்களது சவால்களுக்கான பரிந்துரைகளை முன்வைத்தல்

2.5. கருதுகோள்கள்

$H_1$ வவுனியா மாவட்ட தமிழ் பாடசாலை உளவளத்துணையாளர்கள் அதிகம் சவால்களை எதிர்கொள்ளுகின்றனர்

$H_2$ பாடசாலை உளவளத்துணையாளர்கள் துறைசார்ந்த ரீதியில் அதிகளவிலான சவால்களை எதிர்கொள்ளுகின்றார்கள்

$H_3$ பௌதீக வளங்களின் பற்றாக்குறை என்பது பாடசாலை உளவளத்துணையாளர்களிடையே அதிகளவிலான சவால்களை ஏற்படுத்துகின்றது.

2.6. தரவுக சேகரிக்கும் முறை

ஆய்வுக்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டது. முதலாம் நிலைத் தரவு சேகரிப்பிற்காக நேர்காணல் பயன்படுத்தப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிடம் கட்டமைக்கப்பட்ட ரீதியில் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டு முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டது.

இரண்டாம் நிலைத் தரவுகள் புத்தகங்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்கள் போன்றவற்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

## 3. ஆய்வப் பகுப்பாய்வு

பாடசாலை உளவளத்துணையாளர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட தரவுகள் விபரணப் பகுப்பாய்வின் மூலம் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டது.

வவுனியா மாவட்டமானது வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு எனும் இரு வலயக் கல்வி வலயங்களை அடிப்படையாகக் கொண்டே பாடசாலைகள் நிர்வகிக்கப்படுகின்றன. இவ் இரு வலயங்களிலும் உளவியல் கற்கை நெறியை பின்பற்றிய பாடசாலை உளவளத்துணையாளர்கள் வடக்கு மற்றும் தெற்கு வலயங்களில் இவ்விரண்டு பேர் வீதமும் ஏனைய துறையினை சார்ந்த அதே வேளை உளவளத்துணை டிப்ளோமா கற்கை நெறியினைப் பின்பற்றி உளவளத்துணை ஆசிரியர்களாக நியமனம் பெற்ற ஆசிரியர்களும் இங்கு உளவளத்துணை ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்றனர். தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிடமிருந்து நெர்காணர்களில் பெற்றக் கொள்ளப்பட்ட தரவுகள் பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்டது.

அவ் வகையில் அவர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளாக தொழில்வாண்மை ரீதியாக

- பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் உளவளத்துணையை எவ்வாறும் மேற்கொள்ளலாம் எனும் எண்ணம் காணப்படுதல்.
- தேவையான பிரச்சினைகளை செவிமடுப்பதை விடுத்து தேவையற்ற பிரச்சினைகளை முக்கியப்படுத்தல்.
- தெளிவான கடமைப் பட்டியலின்மை.
- உளவளத்துணை செயன்முறைக்கான டநளளழை எழுதுமாறு கூறல்.
- துறை சார் நிபுணத்துவமின்மை
- உளவளத்துணை ஒழுக்கத்தை பின்பற்றாமை.

என்பனவும், வளம் சார்ந்த ரீதியாக

- உளவளத்துணையினை மேற்கொள்ளப் பொருத்தமான இடவசதியின்மை.
- அமர்வுகள் மேற்கொள்ளப்படும் போது தொந்தரவுகள் ஏற்படல். அமர்வின் தொடர்ச்சித் தன்மையைப் பேண முடியாமை.

- உளவளத்துணை ஆசிரியர்களை வேறு பாடங்களைக் கற்பிக்குமாறு கூறல்.

நிர்வாக மட்ட ரீதியாக

- பிறரின் தலையீடு காணப்படல்.
- இரகசியம் பேண முடியாமை.
- முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் நிலைப்பாடு
- உளவளத்துணை செயன்முறையை விடுப்பு வினாவுதல் எனும் எண்ணப்பாங்கில் நோக்குதல்.

போன்றவாறான பிரச்சினைகள் காணப்படுகின்றன.

- பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் உளவளத்துணையை எவ்வாறும் மேற்கொள்ளலாம் எனும் எண்ணம் காணப்படுதல்.

பாடசாலையில் தலைமைப் பொறுப்புகளிலுள்ள அதிபர், ஆசிரியர்கள் மற்றும் சகபாடி ஆசிரியர்கள் ஆகியோர் உளவளத்துணை பற்றிய தெளிவான அறிவினைக் கொண்டிருப்பதில்லை. அவர்களைப் பொறுத்த மட்டில் உளவளத்துணை என்பது வெறுமனே கலந்துரையாடல், அல்லது பிள்ளைகளை கண்டிப்பதன் மூலம் குணப்படுத்தக் கூடியதோர் பிரச்சினை. இதற்காக தனியே நேரமெடுத்து செயற்படுவது என்பது தேவையற்ற ஒன்று. அவ்வாறு செய்வதனால் குறித்த ஆசிரியை இலகுவாகப் பணியாற்றுகிறார் அவருக்கு அதிகளவான ஓய்வு நேரங்கள் கிடைக்கின்றன. ஆகவே அவ் வேலையை அனைவராலும் மேற்கொள்ள இயலும் எனும் தவறான சிந்தனைப் போக்கு காணப்படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் முரண்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதுடன், பணியை திருப்திகரமாக மேற்கொள்வதிலும் சிரமங்கள் காணப்படுகின்றது. ( பள்ளிக் கூடங்கள்ள எல்லாரும் நினைக்கினம் ஈஸிஆ கவுன்சிலிங் குடுக்கலாம் எண்டு. என்ன சும்மா கதைக்கிறது தானே அத எல்லாரும் செய்யலாம் ஒரு பிரச்சினையும் இல்ல, இதுக்கெண்டு ஏன் தனி அப்போயின்ற்ஸ், என்றவாறாக குறிப்பிடப்பட்டது)

- தேவையான பிரச்சினைகளை செவிமடுப்பதை விடுத்து தேவையற்ற பிரச்சினைகளை முக்கியப்படுத்தல்.

பெரும்பாலான ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு அவசியமான தேவையான பிரச்சினைகளைக் கதைப்பதை விடுத்து தேவையற்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து பிள்ளைகளைப் புரிந்து கொள்ளாமல் அவர்களை காயப்படுத்தவே முனைகின்றனர். உதாரணமாக ஆண் நண்பர்களை கண்டால் தவிர்த்து விலகும் சிறுமி ஒருவர் இருப்பின் அவரது பிரச்சினையை அறிந்து உதவுவதைவிடுத்து சிறுமி, சிறுமியின் குடும்பம் என்றவாறாக விமர்சனம் செய்தல். இதனால் உளவளத்துணை ஆசிரியர் தொடர்பு கொள்ளும் போது கூட பிரச்சினையைக் கூற மாணவர்கள் பயப்படுதல். இதனால் உளவளத்துணை செயற்பாடுகளை முன்னெடுத்தல் சிரமமானதாகிறது. (பிள்ளையளுக்கு உள்ள பிரச்சினையள ஒழுங்கா கேக்கிறேல்ல கேக்கிற விதங்களும் பிழ, எல்லாத்தையும் ஜோக்காவும், கணக்கில்லாம செய்யிறதாலயும் பிள்ளையள் பாதிக்கப்படுதுகள், நாங்க அத கேக்க கூட்டி போகேக்க பிள்ளையள பத்தி தேவையில்லாம கதைக்கிறது என்றவாறாக குறிப்பிடப்பட்டது.)

- தெளிவான கடமைப் பட்டியலின்மை.

ஏனைய பாட ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போல நேர சூசி மற்றும் கடமைப் பட்டியல்கள் உளவளத்துணை ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதனால் பொருத்தமான மற்றும் அவசியமான சந்தர்ப்பங்களில் உளவளத்துணை தேவைப்படும் மாணவர்களை அடையாளம் காண இயலாது போவதுடன், பாடசாலையில் நிர்வாகம் சார்ந்த இதர வேலைகள் குறித்த பாட இடைவெளிகளில் வழங்கப்படுவதால் உளவளத்துணை ஆசிரியர்களால் தமது சேவையை வினைத்திறன் மிக்க வகையில் முன்னெடுக்க இயலாது போகிறது. (எங்களுக்கு டியூட்டி லிஸ்ற் தாறேல்ல, ஒப்பிஸ்

லையள் தாறது, ப்ரீ பாடங்கள்ள போய் படிப்பிக்க சொல்றது இப்பிடியெல்லாம் சொல்லுவார் சேர், ஒண்டும் செய்யேலாது பிரின்சிபல் சொன்னா செய்யத்தான வேணும், ஆனா எங்கட கடமைய திருப்தியா செய்து முடிக்கேல்ல எண்ட கவல இருக்கும் என்றவாறாக குறிப்பிட்டனர்.

- உளவளத்துணை செயன்முறைக்கான lesson எழுதுமாறு கூறல்.

ஏனைய பாட ஆசிரியர்களுக்கு இணையாக வேலை வழங்கப்பட வேண்டும் எனும் நோக்கில் உளவளத்துணை ஆசிரியர்களுக்கான டநளளழை எழுதுமாறு கோரப்படுகிறது. ஆனால் டநளளழை இல் எதனை எவ்வாறு எழுத வேண்டும் என்பது தொடர்பான எண்ணம் உளவளத்துணை பாட அலகுடன் தொடர்புடையவர்களுக்கோ, ஏன் கல்வி அமைச்சுக்கோ கூட இல்லை. இருப்பினும் டநளளழை அடிப்படையில் எவ்வாறு எழுதவேண்டும் எனும் தெளிவு காணப்படாமையும், உளவளத்துணைநாடிகளை முன்கூட்டியே கற்பனை செய்து கூப்பிட இயலாது, துணைநாடிகள் வருகின்ற வேளை உள்ளீர்ப்பு செய்தே ஆக வேண்டும் ஆகவே டநளளழை போடுதல் மற்றும் அதன் அடிப்படையில் பணியாற்றுதல் என்பன சிரமமான விடயங்களாக நோக்கப்படுகின்றன. (மற்ற ரீச்சர்ஸ் எழுதிற மாதிரி லெசன் எழுத சொல்லினம், அத எப்பிடி போடுறது எண்ட ஐடியா ஐ.எஸ்.ஏ கும் இல்ல, கல்வி அமைச்சருக்கும் இல்ல, லெசன் போட்டு அது படி படிப்பிக்கிற பாடமும் இது இல்ல, ஆனா இப்ப லெசன் காட்ட சொல்லினம் என குறிப்பிடப்பட்டது.)

- துறை சார் நிபுணத்துவமின்மை

உளவளத்துணை என்பது பெரும் பரப்பு. ஆனால் இது பற்றிய தெளிவு மேலதிகாரிகளிடத்தோ, மேற்பார்வையாளர்களிடத்தோ காணப்படுவதில்லை. ஆகையால் துறை பற்றிய அறிவுள்ள ஆசிரியர்களது சேவை வினைத்திறன் மிக்க வகையில் நோக்கப்படுவதில்லை. இதனால் ஆசிரியர்கள் மற்றும் மேலதிகாரிகளிடத்து சில சந்தர்ப்பங்களில் முரண்பாட்டுத் தன்மை ஏற்படுகின்றமையும் எதிர்நோக்கப்படுகின்ற சவாலாகவே காணப்படுகின்றது. (ஐ.எஸ்.ஏ தான் எங்கட வலயத்துக்குள்ள உள்ள வளம், அதே போல வலயக்கல்விப் பணிப்பாளரும் எங்கட பீல்டில சப்போர்ட் கூட. ஆனா இவே இரண்டு பேரயும் விட எங்கள சுப்பர்வைஸ் பண்ண வாற ஆக்களுக்கு எங்கட துறை பத்தின இன்ரறெஸ்ற் குறைவு, அதால எங்கள வளப்படுத்திக் கொள்ளவும், ஊக்கப்படுத்தவும் ஆக்கள் குறைவு என குறிப்பிடப்பட்டது)

- உளவளத்துணை ஒழுக்கத்தை பின்பற்றாமை.

உளவளத்துணை சேவையினை முன்னெடுக்கின்ற போது உளவளத்துணை ஒழுக்கத்தை பின்பற்றுதல் என்பது அவசியமானதாகிறது. ஆனால் பாடசாலைகளைப்பொறுத்த மட்டில் உளவளத்துணை ஒழுக்கத்தை பின்பற்றுதல் என்பது கடினமானதொரு விடயமாகவே காணப்படுகிறது. உளவளத்துணை வழங்கப்படும் மாணவர் ஒருவர் அமர்வை நிறைவு செய்து வெளியேறும் போது அம் மாணவரை கேள்விக் கணைகளால் துளைத்தல், அம் மாணவர் தொடர்பாக விமர்சித்தல், அவரது பிரச்சினைகள் தொடர்பாக கூறுமாறு உளவளத்துணை ஆசிரியரை தொந்தரவு செய்தல் என்பன தொடர்ச்சியாக இடம்பெறுவதால் உளவளத்துணை செயற்பாடுகளை முன்னெடுத்தல் என்பது பிரதான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. (கவுன்சிலிங் எதிக்ஸ் பின்பற்றப்படுறதே இல்ல, இட வசதி இல்லாதது அதுக்கு மெயின் ரீசன், அதோட பிள்ள ஒண்டு கவுன்சிலிங் ரூம்ல இருந்து வெளிய போனா அந்த பிள்ளைய நோண்டி நோண்டி கேள்வி கேக்கிறது , அந்தப் பிள்ளைக்கு என்ன பிரச்சினை எண்டு நேரடியா எங்களிட்டையே வந்து கேக்கிறது இதுகள் தான் இப்ப பிரச்சன பிள்ளையள காப்பாத்திறதுக்காக ரீச்சர்ஸ் ஓட பகை வருது என்றவாறாக குறிப்பிடப்பட்டது)

- உளவளத்துணையினை மேற்கொள்ளப் பொருத்தமான இடவசதியின்மை.

வவுனியா மாவட்டத்தை ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்ற போது பாடசாலை உளவளத்துணை செயன்முறையை மேற்கொள்வதற்கான வளங்கள் ஓரளவேனும் காணப்படுகின்றன என்றே கூற வேண்டும். இருப்பினும் பொது இடங்களில் வைத்து உளவளத்துணை செயன்முறையை முன்னெடுப்பது என்பது பாடசாலைகளைப் பொறுத்த வரையில் பொருத்தமற்றதொன்று. ஆகவே அதற்கான தனி அறைகள் பெரும்பாலான பாடசாலைகளில் வழங்கப்பட்டுள்ளன. வழங்கப்படுகின்ற அறைகள் உளவளத்துணை செயன்முறைக்கு மாத்திரமன்றி வெவ்வேறுபட்ட பல தேவைகளுக்காகவும், தேவையற்ற பொருட்களை சேர்த்து வைப்பதற்காகவும், ஆசிரியர்களின் ஓய்வு அறைகளாகவும், பயன்படுத்தப்படுகின்றன. ஆகையால் அடிக்கடி தொந்தரவுகள், ஏற்படுதலால் அமர்வுகளை ஒழுங்காக முன்னெடுக்க இயலாது போகிறது. (பள்ளிக் கூடங்கள்ள வகுப்பு வசதிகளே காணாது, இப்ப தான் ஒரு ரூம் கிடைச்சிருக்கு, அதுகும் ஸராப் ரூம், அப்பிடி இப்பிடி எண்டு வேற தேவைக்கும் கேப்பாங்கள், பிள்ளையளும் டிஸரேப் ஆகும்.)

- அமர்வுகள் மேற்கொள்ளப்படும் போது தொந்தரவுகள் ஏற்படல். அமர்வின் தொடர்ச்சித் தன்மையைப் பேண முடியாமை.

உளவளத்துணை அமர்வுகளை மேற்கொண்டு இருக்கையில் உளவளத்துணை அறையை அதிபர் ஆசிரியர்கள் திறந்து பார்த்தல், என்ன பிரச்சினை எனக் கேட்டல், புதுக் கேசா எனல், அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் உட் பிரவேசித்தல் அமர்தல் என்பன உளவளத்துணைநாடி மற்றும், உளவளத்துணையாளர்களுக்கிடையிலான நம்பகத் தன்மையை பாதிப்பதாக அமைவதுடன், உறவுச் சிக்கல்களையும் ஏற்படுத்துவதாலும், அடிக்கடி ஏற்படும் இடையூறுகள் அமர்வின் தொடர்ச்சித் தன்மையை பாதிப்பதால் உளவளத் துணைநாடியின் பிரச்சினைகளை தெளிவாக விளங்கி பொருத்தமான முறையில் சிகிச்சைத் திட்டமிடலை மேற்கொள்வது என்பது கடினமான விடயமாகக் காணப்படுகிறது. ( செசன் நடந்து கொண்டு இருக்கேக்க கதவத் திறப்பினம், தாங்களும் உள்ள வரக் கேப்பினம், பிள்ளையளுக்கு முன்னுக்கே என்ன பிரச்சினையாம், இதுகள் இப்பிடித்தான், புதுக் கேஸா எண்டு கேப்பினம், இதால கவுன்சிலிங் செய்யிறது கஸ்ரமா இருக்கும்).

- உளவளத்துணை ஆசிரியர்களை வேறு பாடங்களைக் கற்பிக்குமாறு கூறல்.

உளவளத்துணை ஆசிரியர் உளவளத்துணை சேவை மற்றும் அது சார்ந்த கடமைகளை ஆற்றுவதற்கு என நியமிக்கப்படுகின்ற போதும் அதிபர்கள் வெவ்வேறு பாடங்களை கற்பிக்குமாறு கட்டாயப்படுத்துவதும், அதனால் ஏற்படும் வேலைப்பளுவினால் தமக்கான கடமைகளை நிறைவேற்ற இயலாது போவதாலும் உளவளத்துணை சேவையினை முன்னெடுப்பது கடினமானதாகிறது. ( ப்ரீயான வகுப்புகள் இருந்தா போய் கவுன்சிலிங் ரீச்சர கூட்டி வாங்கோ எண்டு தான் அனுப்புவினம், பெரியாக்கள் சொல்லி விடேக்க செசன் நடந்து கொண்டு இருந்தாலும் போக தான் வேணும், ஒண்டும் செய்யேலாது, அதெல்லாம் காலப்போக்கில சில வேளை மாறலாம், எண்டாலும் இப்ப கஸ்ரம் தான்)

- பிறரின் தலையீடு காணப்படல்.

பாடசாலை மாணவர்களது சகபாடி வட்டத்தினுள்ளே சுமூகமற்ற நிலையை தோற்றுவிப்பதில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள்பெரும் பங்கு வகிக்கின்றனர். பாடசாலையில் உளவளத்துணை சேவையைப் பெறும் பிள்ளைகளை தவறாக சித்தரிப்பதும், விமர்சிப்பதும், குறித்த மாணவர்களிடத்து தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்துவதுடன், உளவளத்துணை மீதான அவநம்பிக்கையையும் ஏற்படுத்தி விடுவதனால் உளவளத்துணையை மேற்கொள்வது சிரமமானதாகிறது. (கவன்சிலிங் வாற பிள்ளையள பத்தி தப்பா கதைக்கிறது, ப்ரெண்ட்ஸ சேர விடாம தடுக்கிறது, தனிமைப்படுத்திறது இப்பிடியான வேலையளும் நடக்கும், இதுகள ஓரளவு கவனிச்சா

பிள்ளையளுக்கு விளங்கப்படுத்தலாம், ரீச்சர்ஸ் தங்கட பேர்சனல் பிரச்சினைய வச்சு ஊத வாய்ப்பு கூட)

- இரகசியம் பேண முடியாமை.

பாடசாலைச் சூழலானது குறுகியதொன்றாக இருப்பதாலும், அதன் ஓர் அங்கமாக உளவளத்துணை அறைகள் மற்றும் பகுதிகள் காணப்படுவதனாலும் இரகசியமான முறையில் மாணவர்களை வழி நடத்துவதிலும், ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதிலும், சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்ற அதே வேளை மாணவர்களது தனித் தன்மை பாதிக்கப்படுகின்றமையும் சவால்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

- முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் நிலைப்பாடு

துணைநாடிகளின் பாதுகாப்பு மற்றும் தனித்தன்மை கருதி உளவளத்துணை அறையினுள் எக் காரணங்களைக் கொண்டும் அமர்வு நடைபெறும் நேரங்களில் அறையினுள் பிரவேசிக்க தடை விதித்தல், மாணவ உளவளத்துணைநாடிகள் பற்றி பிறர் கேட்கும் போது அவை பற்றி கூறுவது பிழை என விளக்கமளித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது தலைமைப் பொறுப்புகளில் உள்ளவர்களுடன் முரண்பட வேண்டி ஏற்படலும் சவாலாகக் கருதப்படுகின்றது.

- உளவளத்துணை செயன்முறையை விடுப்பு வினாவுதல் எனும் எண்ணப்பாங்கில் நோக்குதல்.

உளவளத்துணை செயன்முறை என்பது இலகுவாக மேற்கொள்ளப்படக் கூடியதோர் செயன்முறை எனவும், மாணவர்கள் தொடர்பான விடயங்களை துருவிக் கேட்பதற்கானதோர் செயன்முறை எனவும் கருதுவதால் உளவளத்துணை செயன்முறை தொடர்பாக தெளிவுபடுத்திய வண்ணமே இருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. ஆகையால் உளவளத்துணை செயன்முறைகளை மேற்கொள்வது சிரமமாகக் காணப்படுகின்றது.

பெரும்பாலான ஆசிரியர்கள் புதிதாக உளவளத்துணை பாடத்திற்காக நியமனம் பெற்றவர்களாக இருப்பதனால் ஏனைய ஆசிரியர்களை துறை சார்ந்த ரீதியாக எதிர் கொள்வதும், சமாளிப்பதும் இங்கு கடினமானதாக உள்ளது.

மேற்குறித்த சவால்கள் காணப்படுகின்ற போதும் உளவளத்துணை செயன்முறை மூலமாக பிள்ளைகளுக்கு ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்க முனைதல், பிள்ளைகளது பிரச்சினைகளை வெளிக் கொணரல், பிள்ளைகள் மாத்திரமின்றி ஆசிரியர்களும் தமது பிரச்சினைகளை உளவளத்துணை ஆசிரியர்களிடம் பகிர்ந்து கொள்ள முனைதல், ஆகியன பாடசாலை உளவளத்துணையாளர்களைப் பொறுத்த மட்டில் பெற்றுக் கொண்ட வெற்றி என்றே கருத வேண்டும். (எங்களாள ஒரு பிள்ள சந்தோசமா வாழ போது எண்டா அது தான் எங்களுக்கு கிடைச்ச வெற்றி, முதல் இருந்த நிலமையளோட ஒப்பிடேக்க இப்ப எவளவோ பறவால்ல, காலப்போக்கில இன்னும் முன்னேறிடும் எண்டு நம்பிறன், ரீச்சர்ஸ்லயும் சில பேர் வருவினம் அவயளயும் வழிப்படுத்துவம், இதெல்லாம் பாத்தா வெற்றி தானே)

இவ்வாறு பாடசாலை உளவளத்துணையாளர்களது சவால்கள் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டது.

## 4. ஆய்வு முடிவுகளும் பரிந்துரைகளும்

அதிகளவிலான பாடசாலை உளவளத்துணையாளர்களின் கூற்றின் படி உளவளத்துணை தொடர்பான துறை சார்ந்த அறிவின்மையினால் தம்மால் சுதந்திரமாக உளவளத்துணை சேவையை மேற்கொள்ள முடியாது உள்ளதாக கூறுகின்றனர். துறைசார்ந்த ரீதியில் உளவளத்துணை தொடர்பான அறிவின்மையினால் பாடசாலை சமூகத்தில் அதிகளவிலான தவறான எண்ணங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் உளவளத்துணைக்கான மேற்பார்வை விடயங்களுக்கான துறைசார்ந்த நிபுணர்களோ துறைசார்ந்த ஒழுக்க கோவைகளோ

காணப்படாமல் இருப்பது பாடசாலை உளவளத்துணையாளர்கள் எதிர்கொள்ளும் முக்கியமான சவாலாக காணப்படுகின்றது.

4.1. பரிந்துரைகள்

- பாடசாலை உளவளத்துணை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- பாடசாலை உளவளத்துணையாளர்களுக்கான ஒழுக்க கோவைகளை கல்வித் திட்டங்களில் கொண்டு வருதல்
- பாடசாலை உளவளத்துணையாளர்களுக்கான தனிப்பட்ட துறை சார்ந்த மேற்பார்வையாளர்களை நியமித்தல்
- பாடசாலை உளவளத்துணைக்கான பௌதீக வளங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்

**உசாத்துணைகள்.**

திருநாவுக்கரசு கமலநாதன்.,பாலசுப்ரமணியம் தனபாலன்.(2005).இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை- ஒப்பீட்டு ஆய்வு,

ஸ்ரலின்.இ, (2016). *ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல்.* ஜே.எஸ். பிரிண்டர்ஸ்: பண்டத்தரிப்பு.

விமலா கிருஸ்ணபிள்ளை.(2009). *வழிகாட்டலும் ஆலோசனையும்.* சேமமடு பதிப்பகம்.

தமிழினி.த, நேர்காணல், வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியாலயம், 27.7.2018

ராஜரட்ணம்.இ, நேர்காணல், வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை. 30.7.2018.

https://counseling.uncc.edu/school-counseling-program/definition-school-counseling

http://www.yourarticlelibrary.com/education/guidance-in-schools/school-counselling-meaning-principles-and-other-details/63677

Definition from ASCA, https://www.schoolcounselor.org/school-counselors-members/asca-national-model

https://csbs.uni.edu/sahs/counseling/school-counseling

https://www.scribd.com/document/317290734/School-Counseling-in-Sri-Lanka-Analysis-of-the-past-recommending-a-way-forward

https://worldconferences.net/proceedings/gse2015/paper%20gse15/G%20125%20STUDENT%20PERCEPTION%20ON%20CURRENT%20SCHOOL%20COUNSELING%20-%20P.R.D.%20CHATHURIKA.pdf

http://www.ijip.in/Archive/v4i2/18.01.007.20170402.pdf

http://www.seu.ac.lk/researchandpublications/symposium/7th/Inaternational%20Symposium%202017%20-%20SEUSL%20(11).pdf

http://www.e-thaksalawa.moe.gov.lk/web/ta/e-library/item/482-.html?catid=0